ඩාබිඳු සාමූහික සංගමය
டாபிந்து கூட்டு ஒன்றியம்
DABINDU COLLECTIVE UNION

## தொழில்துறை நெருக்கடியை எதிர்கொள்ளும் போது உழைக்கும் பெண்களின் வேலைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்

## தொழிலாளர் தினம் 2025 - கிளிநொச்சி

## டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் தொழிலாளர் தின அறிக்கை

கடந்த நாற்பது ஆண்டுகளாக, டாபிந்து கூட்டு ஒன்றியமானது, சுதந்திர வர்த்தக வலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுடன் இணைந்து போராடி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக, ஆடைத் துறையில் தொழிலாளர்களை தொழிற்சங்கமயமாக்கும் செயல்பாட்டில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். இதன் தொடர்ச்சியாக, நாம் ஒழுங்கமைக்கும் தொழிலாளர்களின் உறுதியின் காரணமாக, 2025 ஆம் ஆண்டு தொழிலாளர் தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் கொண்டாடப்படுகின்றது.

2025 தொழிலாளர் தினத்தன்று நாம், 1970களின் பிற்பகுதியிலிருந்து புதிய தாராளமயக் கொள்கைகளின் கீழ் இலங்கையின் ஏற்றுமதி ஆடைத் தொழில்களில் ஈர்க்கப்பட்ட தொழிலாளர்கள் - குறிப்பாக பெண்கள் - எதிர்கொள்ளும் ஆழ்ந்த பாதிப்பை மீண்டும் வலியுறுத்துவோம். கடன் நெருக்கடிக்கு மத்தியில், இலங்கையின் மிகப்பெரிய அந்நியச் செலாவணி ஆதாரங்களில் ஒன்றான மற்றும் பெரும்பாலும் பெண்களால் நடத்தப்படும் ஆடைத் தொழில், உறுதியற்ற தன்மைக்கு ஆளாகக்கூடியதாக உள்ளது. உலகளாவிய விநியோகச் சங்கிலிகள், இலங்கை போன்ற நாடுகளை பணக்கார, சக்திவாய்ந்த மற்றும் பூகோள ரீதியான தேவைகளைச் சார்ந்து இருக்கச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. அதற்கு பதிலாக, நமது சமூகங்களையும், நமக்கு உயிர் கொடுக்கும் கிரகத்தையும் உற்பத்தி செய்து, பராமரிக்கும் ஒரு பொருளாதாரத்திற்காகப் போராடுவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

சக்திவாய்ந்த பொருளாதாரங்களால் இயக்கப்படும் உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளில், இலங்கை போன்ற நாடுகளில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட தொழிலாள வர்க்கம் நெருக்கடியின் சுமையைத் தாங்குகிறது. 2008 உலகளாவிய நிதி நெருக்கடிக்குப் பிறகு, இலங்கை முதலாளிகள் தொழிலாளர் சட்டங்களைத் திருத்தாமல் 5 நாள் வேலை வாரத்தை அறிமுகப்படுத்தி 9 மணி நேர வேலை நாட்களை இயல்பாக்கினர். 2020 கோவிட் தொற்றுநோய் காலத்தில், முதலாளிகள் ஆடைத் தொழிற்சாலைகளை அத்தியாவசிய சேவைகளாக நியமித்தனர், தொழிலாளர்களுக்கு வேலை நேரத்தைக் குறைக்காமல் அரை ஊதியத்தை வழங்கினர். 2022 நெருக்கடிக்குப் பிறகு, தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள் மூலம் தொழிலாளர் பாதுகாப்பை பலவீனப்படுத்த நெகிழ்வான வேலை முறையை அறிமுகப்படுத்த முதலாளிகள் முயன்றனர். ஏப்ரல் 2025: அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் வரிவிதிப்பு ஆடைத் துறையில் உறுதியற்ற தன்மையை அதிகப்படுத்தி, தொழிலாளர்களின் வேலைகள் மற்றும் உரிமைகளை குறைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. அரசு அத்தகைய கொள்கைகளுக்கு வழிவகுக்கிறது.

No. 221, Welaboda Road, Katunayake, Sri Lanka.
Tel: +94 11 4 851 383 | Email: dabindu.infoco@gmail.com | Web: www.dabinducollective.org | Registration No - 9194

நெருக்கடியிலிருந்து நெருக்கடிக்கு, அதிகார ஏற்றத்தாழ்வு தீவிரமடைகிறது: முதலாளிகள் சலுகைகளைப் பெறுகிறார்கள், தொழிலாளர்களின் உரிமைகள் குறைக்கப்படுகின்றன. மே தினத்தை முன்னிட்டு, 8 மணி நேர வேலை நாள், வாழ்க்கை ஊதியம், தொழிலாளர் உரிமைகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் வேலைப் பாதுகாப்பை நிபந்தனையின்றி வலுப்படுத்த வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.

தொழிற்சங்க நாசவேலைகள், தொழிற்சங்கத்தில் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களை துன்புறுத்தல், பாகுபாடு காட்டுதல் மற்றும் பணிநீக்கம் செய்தல் மூலம் மேலும் மேலும் கடுமையாகி வருகின்றன, இது அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட சங்க சுதந்திரத்தை நேரடியாக மீறுவதாகும். இந்த சூழ்நிலை காரணமாக, வடக்கில் தொழிலாளர்களின் அடையாளங்களைப் பாதுகாக்கும் தொழிலாளர் தினத்தை ஏற்பாடு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் இருந்தபோதிலும், இந்த சட்டங்களை செயல்படுத்த அரசாங்க நடவடிக்கை இல்லை.

பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் வன்முறை ஆகியவை ஆடைத் தொழிலிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குப் பொதுவான பிரச்சினைகளாகும். இந்த வன்முறை பணியிடத்திற்கு அப்பால் சென்று, வேலைக்குச் செல்லும் வழியிலும், விடுதிகளிலும் அனுபவிக்கப்படுகிறது.

வீட்டில் செய்யப்படும் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகள் பெண்களை அதிக சுமைகளாக மாற்றி, அவர்களை நிலையற்ற மற்றும் முறைசாரா வேலைகளுக்குத் தள்ளுகின்றன. நெகிழ்வான வேலையை ஊக்குவிக்கும் முன்மொழியப்பட்ட தொழிலாளர் சட்டங்கள், பெண்களின் சுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, மாறாக அவர்களின் நேரத்தையும் உழைப்பையும் மேலும் சுரண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த மே தினத்தில், பாலினம், இனம், சாதி போன்ற அனைத்து வகையான அடையாளங்களாலும் நம்மிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அங்கீகரித்து எதிர்த்துப் போராட நாம் ஒன்று கூடுவோம். உலகளாவிய தெற்கில் பணிபுரியும் பெண்களைக் கைவிட்ட உலகளாவிய நிர்வாகத்தையும் புதிய தாராளமய அரசையும் சவால் செய்யத் தீர்மானித்து, நாங்கள் பின்வருவனவற்றைக் கோருகிறோம்:

1. உலகளாவிய ஆடை விநியோகச் சங்கிலி நெருக்கடியால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் வேலைப் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு;

2. டிரம்பின் வரிகளுக்கு எதிராக தொழிலாளர்களைப் பாதுகாக்க ஒரு பொதுக் கொள்கையை உருவாக்குவதற்கு;

3. 8 மணி நேர வேலைநாளைப் பாதுகாப்பதற்கு;

4. 8 மணிநேர வேலைக்கான வாழ்க்கை ஊதியத்தைப் பெறுவதற்கு:

5. உற்பத்தி இலக்குகள் மற்றும் உழைப்புக்கு ஏற்ற சம்பளத்தைப் பெறுவதற்கு:

6. சுகாதாரத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் உற்பத்தி இலக்குகள் மற்றும் உற்பத்தி முறைகளை அரச தணிக்கைக்கு உட்படுத்துதல் மற்றும் அவற்றைக் குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்துதற்கு:

7. பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார பிரச்சனைகளைத் தடுக்க ஒவ்வொரு மணி நேரமும் கழிப்பறையைப் பயன்படுத்தவும் தண்ணீர் குடிக்கவும் இடைவேளை எடுத்துக் கொள்வதற்கு;

8. தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டலுக்கு சர்வதேச பிராண்ட் பொறுப்பை ஏற்பதற்கும்:

9. தொழிலாளர்களைப் பாதுகாக்கவும், அமெரிக்காவின் கட்டணக் கொள்கையை எதிர்கொள்ளவும், ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கு:

10. பணியிடத்தில் நியாயமான விலையில் சத்தான உணவைப் பெறுவதற்கு:

11. தொழிலாளர்களுக்கு மருத்துவ விடுப்பு மற்றும் அவசர விடுப்பு பெற்றுக் கொடுப்பதற்கு:

12. உலகில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு;

13. தொழிலாளர்களின் சங்க சுதந்திரம், பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம், கூட்டு பேரம் பேசும் சுதந்திரம் ஆகியவற்றை நிபந்தனையின்றிப் பாதுகாப்பதற்கு:

14. தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பகல்நேர பராமரிப்பு வசதிகள், நீண்ட கால ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு போன்ற பெண்களின் பாதுகாப்பு உழைப்புக்கான ஆதரவு கட்டமைப்புகளைப் பெறுவதற்கு:

15. சுரண்டல் மற்றும் அடிமை உழைப்பை அனுமதிக்கும் தொழிலாளர் சட்டங்களை அகற்றுவதற்கு:

16. 24 மணி நேரமும் செயல்படும் மகளிர் காவல் பணியகத்தை நிறுவுவதற்கு:

17. சுகாதார மருத்துவ அலுவலகத்தால் நடத்தப்படும் கிளினிக்கிற்கு வாரத்தில் ஒரு நாளை வழங்க தொழிற்சாலைகளைக் கோருவதற்கு:

18. அரசாங்கத்தால் நடத்தப்படும் பாதுகாப்பான இல்லங்கள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குவதற்கு:

19. சுகாதார (சானிட்டரி) நாப்கின்கள் மீது விதிக்கப்பட்ட வரியை இரத்து செய்து, மானிய விலையில் சுகாதார (சானிட்டரி) நாப்கின்களைப் பெறுவதற்கு:

20. IMF வெட்டுக்கள், VAT மற்றும் மின்சாரம், எரிவாயு விலை உயர்வுகள் மற்றும் அரசு நிறுவனங்களின் விற்பனையை உடனடியாக நிறுத்துவதற்கு:

21. உழைக்கும் மக்களை வெளிநாட்டுக் கடனால் சுமையாக்குவதை நிறுத்தி, சர்வதேச தனியார் பத்திரதாரர்கள் பொறுப்பேற்க கட்டாயப்படுத்துவதற்கு:

22. வருங்கால வைப்பு நிதியின் வட்டி விலக்கு மற்றும் வரிவிதிப்பைத் தடுப்பதற்கு:

23. அத்தியாவசிய மானியங்கள் மற்றும் இலவச சுகாதார சேவைகள் மற்றும் கல்வி முறையின் வளங்களை அதிகரிப்பதன் மூலம் மனித வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு:

24. பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிலம், வீட்டுவசதி, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்

25. சிறு விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதார இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும்:

கோரி நாம் கட்டாயப்படுத்தகின்றோம்.

ஆடைத் துறையில் நிலவும் வரி அச்சுறுத்தல்கள் மற்றும் ஸ்திரமின்மைக்கு மத்தியில், அமெரிக்காவிற்கு ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களைப் பாதுகாக்க, அமெரிக்காவிற்கு ஆடைகளை உற்பத்தி செய்யும் கிளிநொச்சி தொழிலாளர்களுடன் இணைந்து தொழிலாளர் தினத்தைக் கொண்டாட முடிவு செய்தோம். தொழிலாளர் தினத்தின் கட்டமைப்பிற்குள், முறையான பணியிடங்கள், தொழிற்சாலைகள், தோட்டங்கள், விவசாய நிலங்கள் மற்றும் கடல் எல்லைகளைத் தாண்டிய பெண்களின் உழைப்பின் முக்கியத்துவத்தையும் நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். சர்வதேச தொழிலாளர் தினத்தை நாம் கொண்டாடும் வேளையில், ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தின் சுமையைத் தாங்கும் பெண்களின் உழைப்பின் பன்முகத் தன்மையைக் கொண்டாடுகிறோம்.

**உழைக்கும் மக்கள் வாழ்க!**

**உழைக்கும் பெண்கள் நீடூழி வாழ்க!**

No. 221, Welaboda Road, Katunayake, Sri Lanka.
Tel: +94 11 4 851 383 | Email: dabindu.infoco@gmail.com | Web: www.dabinducollective.org | Registration No - 9194